முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

# 62 - குடியியற் கல்வி

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

**இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.**

# கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 62 - குடியியற் கல்வி I, II

## இறுதிப்புள்ளிகளைக் கணித்தல்

### வினாப்பத்திரம் I

வினாப்பத்திரம் I - 1 x 40 = 40 புள்ளிகள்

### வினாப்பத்திரம் II

முதலாம் வினா மற்றும் ஏனைய நான்கு வினாக்கள் உள்ளிட்ட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

இறுதிப் புள்ளி வழங்கல்.

| | | |
|---|---|---|
| பகுதி II | 1 ஆம் வினா 02 x 10 | 20 புள்ளிகள் |
| | 2 ஆம் வினா 10 | |
| | 3 ஆம் வினா 10 | |
| | 4 ஆம் வினா 10 | 04 வினாக்களிற்கு 10 x 04 = 40 புள்ளிகள் |
| | 5 ஆம் வினா 10 | |
| | 6 ஆம் வினா 10 | |
| | 7 ஆம் வினா 10 | |

**வினாப்பத்திரம் I - 40 புள்ளிகள்**
**வினாப்பத்திரம் II - 60 புள்ளிகள்**
**மொத்தம் - 100 புள்ளிகள்**

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2022 (2023)

### விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர்கள் ஊதா நிறக் குமிழ் முனை பேனாவினை விடைத்தாள்களை புள்ளியிடுவதற்குப் பயன்படுத்தவும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரீட்சகரினால் புள்ளிகள் பிழையற்றது என உறுதிப்படுத்த நீலநிற அல்லது கருப்புநிறப் பேனாவினை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..........................................................................
..........................................................................
.......................................................................... ✓ △ 4/5

(ii) ..........................................................................
..........................................................................
.......................................................................... ✓ △ 3/5

(iii) ..........................................................................
..........................................................................
.......................................................................... ✓ △ 3/5

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

### பல்தேர்வு விடைத்தாள்

**01 துளைத்தாள் தயாரித்தல்**

i. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.
ii. அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.
iii. துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.
iv. சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.
v. **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை X அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிட்டு பிழையிடவும் புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஒவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் ஒவ்வொரு விடைக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளின் தொகையினை ஒவ்வொரு பக்கமாக கூட்டவும் அக்கூட்டுத்தொகை உங்களால் முன்பக்கத்தில் மொத்தம் எனக் குறிப்பிட்ட மொத்தப்புள்ளிகளுக்கு சமமானதா? என பரீட்சிக்கவும்

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

i. ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.
ii. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.
iii. வினாப்பத்திரம் I இற்கான புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**
iv. வினாப்பத்திரம் II இற்கான புள்ளி பட்டியலிலை தயார் செய்யும் போது பகுதிப்புள்ளிகளை பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.
v. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் **பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**
vi. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப் புள்ளிகளை உள்ளடக்கி அவ்வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

i. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது **முழுத்தானத்தில்** வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது **தசம தானங்களில் அல்லது பின்னத்தில் பதியப்படலாகாது.**
ii. புள்ளி பட்டியலில் சகல பக்கங்களிலும் புள்ளிகளை பதிந்த உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்பார்த்த உதவி பரீட்சகர், புள்ளிகளை பரீட்சிக்கும் எண்கணித பரீட்சகர் (EMF) மற்றும் பிரதம பரீட்சகர் ஆகியோர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2022 (2023)
# 62 - குடியியற் கல்வி

**முதலாம் வினாப்பத்திரத்தின் நோக்கங்கள்**

- பாடத்தின் அனைத்து அலகுகளும் உள்ளடங்கும் வண்ணம் குறிப்பான விடயங்கள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்
- ஜனநாயக ஆட்சிமுறையின் முக்கியத்துவம், அதிகாரப் பகிர்வு மற்றும் பரவலாக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.
- பல்பண்பாட்டுச் சமூகம் ஒன்றில் வாழும் பிரஜைகள் கொண்டிருக்க வேண்டிய மாணிடப்பண்புகள் மற்றும் விழுமியங்கள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.
- பல்வேறு பொருளாதார முறைகளின் பண்புகளையும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பான அறிவையும், மனப்பாங்கையும் பரீட்சித்தல்.
- சட்டம் மற்றும் ஒழுங்கு, மோதல் முகாமைத்துவம், மனித உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்கைப் பரீட்சித்தல்.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**62 | T | I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)**

| | |
|---|---|
| **පුරවැසි අධ්‍යාපනය** | **I, II** |
| குடியியற் கல்வி | **I, II** |
| Civic Education | **I, II** |

පැය තුනයි
*மூன்று மணித்தியாலங்கள்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## குடியியற் கல்வி I

**அறிவுறுத்தல்கள் :**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
- ※ உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
- ※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** மக்களினால் அவர்களின் நிர்வாகத்திற்காக நடத்தப்படும் நிர்வாக முறை
(1) பாஸிஸ வாதம் (2) சனநாயகம் (3) முதலாளித்துவம் (4) சோஷலிசம்

**2.** தேர்தல் தொகுதிகளைப் பிரித்து வேறாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் இரண்டு பிரதான அளவீட்டு நியதிகள் எவை?
(1) நிலப்பரப்பும் சனத்தொகையும் (2) சனத்தொகையும் இனவேறுபாடும்
(3) நிலப்பரப்பும் சுகாதாரமும் (4) பொருளாதாரமும் கலாசாரமும்

**3.** இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் பொதுச் சட்டம் யாது?
(1) அரசியல் யாப்புச் சட்டம் (2) கண்டிய சட்டம்
(3) குற்றவியல் சட்டம் (4) உரோமன் டச்சுச் சட்டம்

**4.** உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நுகர்வோரிடம் கொண்டு செல்லும் செயன்முறை
(1) நுகர்வு (2) விற்பனை (3) விநியோகம் (4) உற்பத்தி

**5.** மோதல் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று
(1) அபிலாசைகள் நிறைவேறாமை (2) இடையூறுகள் ஏற்படுதல்
(3) உளவியல் நிலைமை (4) இனப்பாகுபாடு

**6.** இலங்கையின் பிரதான சட்ட அலுவலர்
(1) ஒம்புட்ஸ்மன் (2) சட்டமா அதிபர் (3) நீதி அமைச்சர் (4) பிரதம நீதியரசர்

**7.** இயற்கை முறையில் வளி மாசடைதல் நிகழுதல்
(1) கைத்தொழிற்சாலைகளினால் நச்சுப்புகை வெளியேற்றப்படுதல்.
(2) வாகனங்களினால் காபனீரொட்சைட்டு வெளியேற்றப்படுதல்.
(3) காடுகளை அழிப்பதால் வளி மாசடைதல்
(4) புழுதிப் புயலினால் வளி மாசடைதல்

**8.** பன்மை பண்பாட்டுச் சமூகம் ஒன்றில் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதினால்
(1) அன்னியோன்ய தொடர்பு விருத்தியடையும்.
(2) ஊழல் மற்றும் மோசடிகள் குறைக்கப்பட முடியும்.
(3) ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட முடியும்.
(4) அரசியல் தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல் இடம்பெறும்.

9. சிறுவர்களின் உச்சநிலை நலனுக்காக அரசினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமை
(1) சிறுவர் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாத்தல்
(2) சமூகப் பாதுகாப்பை பெற்றுக்கொடுத்தல்
(3) போதைப் பொருள் பாவனையிலிருந்து பாதுகாத்தல்
(4) சிறுவர்களை வேலைக்கமர்த்துவதிலிருந்து பாதுகாத்தல்

10. நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தின் முக்கிய வடிவங்களில் ஒன்று
(1) ஏற்றுமதி வர்த்தகம் (2) இறக்குமதி வர்த்தகம்
(3) பன்முக வர்த்தகம் (4) சர்வதேச வர்த்தகம்

11. சமூகத்தில் வாழும் நபர்களுடனும் நிகழும் சமூக அமைப்புக்களுடனும் தொடர்பு கொள்வதில் சமூகத்திற்கு உரிய திறன்
(1) சனநாயகம் (2) சட்டமியற்றல் (3) நிறைவேற்றுதல் (4) அதிகாரம்

12. இரு கட்சி முறை நிலவும் நாடுகளின் சோடி
(1) பெரிய பிரித்தானியா, இந்தியா
(2) சீனா, ரஷ்யா
(3) பெரிய பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கஅரசு
(4) ஜெர்மனி, வடகொரியா

13. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் இரத்து அதிகாரம் கொண்டவை
(1) பொதுச்சபை அங்கத்தவர்கள்
(2) ஐக்கிய நாடுகளின் அங்கத்தவர்கள்
(3) நம்பிக்கைப் பொறுப்பாண்மை சபை அங்கத்தவர்கள்
(4) நிரந்தர உறுப்பினர்கள்

14. நீர் மாசடைதல் என்பதைச் சரியாகக் குறிப்பிடும் கூற்று
(1) களைநாசினி, பூஞ்சணக்கொல்லி என்பன நீரில் கலத்தல்
(2) நீரின் இயற்கையான இயல்புகள் மாற்றமடைதல்
(3) அமில மழையினால் நீரில் நச்சுப்பதார்த்தங்கள் சேர்தல்
(4) கைத்தொழில் கழிவுகள் நீரில் கலத்தல்

15. அறிவு, வழிபாடுகள், கலைகள், சட்டங்கள், பழக்கவழக்கங்கள், விழுமியங்கள் மற்றும் மனிதனால் சமூகத் தனியாளாக பெற்றுக்கொள்ளும் பழக்கங்கள், பின்பற்றுதல்கள், ஆற்றல்கள் என்பவற்றின் மொத்த அமைப்பு
(1) நற்பண்புகள் (2) மரபுகள் (3) பண்பாடு (4) சமூக முறைமை

16. பொதுநலவாய அமைப்பின் தற்போதைய தலைவர் யார்?
(1) பெரிய பிரித்தானியாவின் பிரதம மந்திரி
(2) பெரிய பிரித்தானியாவின் மன்னர்
(3) பெரிய பிரித்தானியாவின் வெளியுறவு அமைச்சர்
(4) பெரிய பிரித்தானியாவின் ஆணையாளர்

17. இலங்கைக் குடியரசின் இறைமைக்கு உரிய பிரிவுகள் எவை?
(1) நிர்வாக அதிகாரம், மனித உரிமைகள், வாக்குரிமை அதிகாரம்
(2) நிர்வாக அதிகாரம், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை அதிகாரம்
(3) நிர்வாக அதிகாரம், முதியோர் உரிமைகள், வாக்குரிமை அதிகாரம்
(4) நிர்வாக அதிகாரம், பெண்கள் உரிமைகள், வாக்குரிமை அதிகாரம்

18. மோதல் ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும் உளவியல் காரணிகளில் ஒன்று
(1) நடத்தை (2) சந்தர்ப்பம் (3) மனப்பாங்கு (4) திறன்கள்

19. தனியாட்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நேரடியாகப் பூர்த்தி செய்வதற்குப் பங்களிப்புச் செய்யும் பொருட்கள் இனம் காணப்படுவது
(1) கைத்தொழில் பொருட்கள் எனவாகும். (2) நுகர்வுப் பொருட்கள் எனவாகும்.
(3) மூலதனப் பொருட்கள் எனவாகும். (4) இடைநிலைப் பொருட்கள் எனவாகும்.

• •

**20.** இலங்கையில் நீதவான் நீதிமன்றம் மூலம் தீர்வு பெறக்கூடிய வழக்குகளைக் குறிப்பிடுவது
- (1) தேர்தல் தொடர்பிலான வழக்குகள்
- (2) வருமானம் தொடர்பிலான வழக்குகள்
- (3) திருமணம் தொடர்பிலான வழக்குகள்
- (4) காணி தொடர்பிலான வழக்குகள்

**21.** இலங்கையில் அதிகாரப் பகிர்வு நோக்குடன் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் செய்த சீர்திருத்தம் எது?
- (1) 13 ஆம் அரசியல் யாப்பு சீர்திருத்தம்
- (2) 15 ஆம் அரசியல் யாப்பு சீர்திருத்தம்
- (3) 18 ஆம் அரசியல் யாப்பு சீர்திருத்தம்
- (4) 20 ஆம் அரசியல் யாப்பு சீர்திருத்தம்

**22.** எதிர்கால சந்ததிக்கான தேவைகளுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்
- (1) சமூக அபிவிருத்தி
- (2) நல்லொழுக்க அபிவிருத்தி
- (3) பேண்தகு அபிவிருத்தி
- (4) பொருளாதார அபிவிருத்தி

**23.** பின்வரும் மனித உரிமைகளில் குடியியல் மற்றும் அரசியல் தொடர்பான உரிமையினைத் தெரிவுசெய்க.
- (1) கல்வி பெறுவதற்கான உரிமை
- (2) தனிப்பட்ட சொத்துக்களை வைத்திருப்பதற்கான உரிமை
- (3) சமூகப் பாதுகாப்பிற்கான உரிமை
- (4) சுதந்திரமாகக் கருத்துக்களை கொண்டிருக்கும் உரிமை

**24.** மோதலைத் தவிர்ப்பதற்கு பிரஜை ஒருவர் கொண்டிருக்க வேண்டிய சமூகப் பண்பு
- (1) சகிப்புத் தன்மை
- (2) ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
- (3) உணர்ச்சி வசப்படுதல்
- (4) அகிம்சைப் பண்பு

**25.** நவீன அரசுகளில் அதிகாரப் பகிர்வு இடம் பெறுவதற்கான காரணம்
- (1) அரசாங்கத்தின் சட்டமியற்றும் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆகும்.
- (2) நிர்வாகப் பிரமாணங்களை இலகுவாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆகும்.
- (3) அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துவதற்கு ஆகும்.
- (4) அரசின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஆகும்.

**26.** இலங்கையில் 'அரசுக்கழகம்' அரசாங்கமுறை அறிமுகப்படுத்தப்பட்டது
- (1) மக்கலம் யாப்பு சீர்திருத்தத்தினால்
- (2) டொனமூர் யாப்பு சீர்திருத்தத்தினால்
- (3) சோல்பரி யாப்பு சீர்திருத்தத்தினால்
- (4) மனிங் யாப்பு சீர்திருத்தத்தினால்

**27.** மோதல்களை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்வதினால் ஏற்படும் நன்மை
- (1) வெற்றியையும் தோல்வியையும் தாங்கிக் கொள்ளும் திறன் ஏற்படுதல்
- (2) தாங்கிக் கொள்ளும் சக்தி ஏற்படுதல்
- (3) ஆக்கத்திறன் சிந்தனை விருத்தியடைதல்
- (4) செல்வம் சொத்து பாதிப்புக்களைத் தவிர்த்தல்

**28.** அரசு ஒன்றில் காணக்கூடிய அடிப்படைப் பண்புகளைச் சரியாகக் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
- (1) நிலம், மக்கள் தொகை, அரசாங்கம், ஜனாதிபதி
- (2) நிலம், மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை
- (3) நிலம், மக்கள் தொகை, சட்டம், அதிகாரம்
- (4) நிலம், மக்கள் தொகை, சட்டம், இறைமை

**29.** சமயம், குலம், பாரம்பரியம், பழக்கவழக்கம், உரிமைகள், கடமைகளும் பொறுப்புக்களும் எனும் கூறுகள் உள்ளடங்கிய சூழல் தொகுதி
- (1) இயற்கைச் சூழல்
- (2) கலாசார சூழல்
- (3) சமூக சூழல்
- (4) சமய சூழல்

**30.** ஒரு நாட்டில் சமூக நீதி வீழ்ச்சியடைவதற்கான காரணங்களில் ஒன்று
- (1) பொருளாதார மற்றும் மனித வளங்கள் நலிவடைதல்
- (2) அரசியல் அதிகாரம் செயற்படுதல் நலிவடைதல்
- (3) சர்வதேச தொடர்புகள் நலிவடைதல்
- (4) சமய கலாசார தொடர்புகள் நலிவடைதல்

**31.** பின்வருவனவற்றுள் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் நிறைவேற்றப்பட்ட சட்டம் எது?
- (1) இலவச கல்விச் சட்டம்
- (2) சமூகப் பாதுகாப்புச் சட்டம்
- (3) ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்
- (4) சம்பள சபைக் கட்டளைச் சட்டம்

**32.** பொருட்களின் உற்பத்தியில் அதிகளவில் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் இனம் காணப்பட்டது
(1) முதலீட்டு நுட்பம் (2) இயந்திர நுட்பம்
(3) உழைப்பு நுட்பம் (4) கைத்தொழில் நுட்பம்

**33.** மனிதர்கள் ஒரு பொருளை அல்லது சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வருவதில் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் காரணி
(1) தேவை (2) சூழல் (3) விளம்பரம் (4) வருமானம்

**34.** சமூகத்தில் வாழும் மக்களிடையே ஏற்படக்கூடிய உள்ளக மோதல் இனம் காணப்படுவது
(1) தனியாள் மோதல், சமூக மோதல் (2) வெளிப்படையான மோதல், தனியாள் மோதல்
(3) சமூக மோதல், நுண்மையான மோதல் (4) நுண்மையான மோதல், வெளிப்படையான மோதல்

**35.** சூழல் பிரச்சனைகள் ஏற்படுவதற்குக் காரணமான முக்கிய விடயம் யாது?
(1) வளங்களை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தல்
(2) மனிதர்களின் அறியாமை
(3) மனிதர்களின் வறுமை
(4) வளங்கள் வரையறைக்குட்பட்டிருத்தல்

**36.** பாராளுமன்ற ஆட்சியின் பண்பினைக் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க
(1) நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படும்.
(2) நிறைவேற்றுத் துறையினால் சட்டத்துறை தெரிவு செய்யப்படும்.
(3) சட்டத்துறை மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படும்.
(4) அரசின் தலைவர் நிறைவேற்று ஜனாதிபதி ஆவார்.

**37.** ஒரு நாட்டில் அனைத்துத் துறைகளையும்விட உயர்வானதாக சட்டம் நிலவுதல் இனம் காணப்படுவது
(1) சட்டத்தின் ஆதிக்கம் (2) சட்டத்தின் சமத்துவம்
(3) சட்டத்தின் நீதி (4) சட்டத்தின் நியாயம்

**38.** பின்வரும் கூற்றுக்களில் கலாசாரம் பற்றிய மிகச் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) தனியாள் வாழும் சமூகத்திற்கேற்ப கலாசாரம் மாறுபடும்.
(2) தனியாள் நடத்தை வாழும் கலாசாரத்திற்கேற்ப நிகழும்.
(3) எந்தவொரு சமூகத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது கலாசாரம் இருக்கும்.
(4) சமூக அபிவிருத்திக்கு கலாசாரம் பங்களிப்பு வழங்கும்.

**39.** பின்வரும் கூற்றுகளில் நீதித்துறையில் சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் உள்ளடங்கிய விடையைத் தெரிவுசெய்க.

A - மேல்நீதிமன்ற நீதிபதிகளை ஜனாதிபதி நியமித்தல்
B - சகல பிரசைகளும் சட்டம் பற்றிய தெளிவினைப் பெற்றிருத்தல்
C - நீதிபதிகளின் சம்பளக் கொடுப்பனவு திரட்டப்பட்ட பொது நிதியிலிருந்து செலுத்தப்படுதல்
D - நீதிச்சேவை ஆணைக்குழு தாபிக்கப்படுதல்
E - மக்களிடையே சட்டம் மீது கௌரவத்தை ஏற்படுத்தல்

(1) ABD (2) ACD (3) BDE (4) CDE

**40.** 'அ' நிரலில் அரசு ஒன்றில் காணக்கூடிய பிரிவுகளும் 'ஆ' நிரலில் அந்தப் பிரிவுகளினால் நிறைவேற்றப்படும் பணிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. 'அ' நிரலை 'ஆ' நிரலுடன் சரியாகப் பொருத்தும்போது சரியாக அமையும் விடையைத் தெரிவுசெய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. சட்டத்துறை | A - சட்டங்களை நடைமுறைப்படுத்தல் |
| 2. நிறைவேற்றுத்துறை | B - நிர்வாக நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுதல் |
| 3. நீதித்துறை | C - சட்டங்களை விதித்தல் |
| 4. அரசாங்கக் கட்சி | D - மாற்று அரசாங்கமாகச் செயற்படுதல் |
| 5. எதிர்க்கட்சி | E - நீதியை உறுதிப்படுத்தல் |

(1) ABCDE (2) ACDBE (3) BCDAE (4) CAEBD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **62** විෂයය / பாடம்: **குடியியற் கல்வி**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය /பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 1 | 31. | 4 |
| 02. | 1 | 12. | 3 | 22. | 3 | 32. | 1 |
| 03. | 1 | 13. | 4 | 23. | 4 | 33. | 3 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 2 | 34. | 1 |
| 05. | 4 | 15. | 3 | 25. | 4 | 35. | 1 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 2 | 36. | 3 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 4 | 37. | 1 |
| 08. | 1 | 18. | 3 | 28. | 2 | 38. | 3 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 3 | 39. | 2 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 1 | 40. | 4 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2022 (2023)
## 62 - குடியியற் கல்வி

**இரண்டாம் வினாப்பத்திரத்தின் நோக்கங்கள்**

- பாடத்தின் அனைத்து அலகுகளும் உள்ளடங்கும் வண்ணம் குறிப்பான விடயங்கள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்

- சனநாயகமொன்றில் மோதல் ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் மோதல் தீர்வுக்காக பின்பற்றக்கூடிய வழிமுறைகள் தொடர்பில் ஒப்பீட்டு ரீதியான விளக்கத்தைப் பரீட்சித்தல்.

- பொருளாதார முறையொன்றில் உற்பத்திக் காரணிகள், உற்பத்தி மேற்கொள்ளப்படும் துறைகள் மற்றும் உற்பத்திப் பொருட்களின் இயல்புகள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.

- மனித உரிமைகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பான அறிவையும், விளக்கத்தையும் மனப்பாங்கினையும் பரீட்சித்தல்.

- இலங்கையில் நடைமுறையில் உள்ள நீதித்துறை மற்றும் செயற்பாடுகள் தொடர்பில், பகுத்தாராயும் அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.

- அதிகாரப் பகிர்வு அல்லது அதிகாரப் பரவலாக்கத்தின் முக்கியத்துவம் மற்றும் நன்மை தீமைகள் தொடர்பில் உய்த்தறியும் அறிவைப் பரீட்சித்தல்.

- அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களில் காணப்படும் அதிகாரங்கள் கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பான அறிவு, விளக்கம் மனப்பாங்கைப் பரீட்சித்தல்.

- சூழல் பிரச்சினை மற்றும் நிலையான அபிவிருத்தித் தொடர்பில் அரசாங்கம் மற்றும் பிரஜைகளின் கடமைகள் மற்றும் மனப்பாங்குகள் தொடர்பில் பரீட்சித்தல்.

- சர்வதேச உறவுகள் ஏற்படுவதற்கான காரணிகள், முக்கியத்துவம் மற்றும் நன்மை தீமைகள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல்.

## பத்திரம் II வினாக்களும் விடைகளும்

**01 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலின் பண்புகளை விபரிப்பார்.
- பொருளாதார முறையொன்றில் காணப்படும் வியாபாரத்தின் வகைகளைப் பெயரிடுவார்.
- பல்வேறு மோதலுக்கு உட்படும் தரப்பினரை விவரிப்பார்.
- பல் பண்பாட்டுச் சமூகத்தில் பிரசைகளின் கடமைகளை பொருள் விளக்கம் செய்வார்.
- மனித உரிமைகள் மீறப்படும் போது கைக்கொள்ளவேண்டிய வழிகளை விபரிப்பார்
- சர்வதேச உறவுகளைப் பேணுவதன் நன்மை தீமைகளை விபரிப்பார்.
- காலநிலை மாற்றம் பற்றி பகுத்தாய்வார்.
- ஜனாதிபதியின் அதிகாரங்களை விளக்குவார்.

**1.** (i) சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் முறையின் இரண்டு பண்புகளை எழுதுக.

(ii) மத்திய அரசும் மாகாணசபைகளும் சமமாகக் கொண்டிருக்கும் **இரண்டு** வகையான அதிகாரங்களை எழுதுக.

(iii) பன்மை பண்பாட்டுச் சமூகம் ஒன்றின் பிரஜை விருத்தி செய்யவேண்டிய **இரண்டு** பண்புகளைக் குறிப்பிடுக.

(iv) வர்த்தகத்தில் காணக்கூடிய **இரண்டு** முக்கிய பகுதிகள் எவை?

(v) மோதலை உருவாக்கும் **இரண்டு** தரப்பினரைக் குறிப்பிடுக.

(vi) இலங்கையில் தற்போதைய நீதித்துறையின் அதியுயர் நிறுவகத்தையும் மிகக் கீழான நீதி நிறுவகத்தையும் குறிப்பிடுக.

(vii) 1978 அரசியல் யாப்புக்கு ஏற்ப சனாதிபதிக்கு உரித்தான **இரண்டு** சட்டவாக்க அதிகாரங்களைக் குறிப்பிடுக.

(viii) அடிப்படை உரிமைகள் மீறப்படுதல் தொடர்பாகப் பிரஜைகள் மேற்கொள்ளக்கூடிய **இரண்டு** செயற்பாடுகளைக் குறிப்பிடுக.

(ix) காலநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் **இரண்டு** பாதகமான விளைவுகளை எழுதுக.

(x) சர்வதேச உறவுகளைப் பேணுவதால் ஒரு நாட்டுக்கு ஏற்படும் **இரண்டு** சாதகமான விளைவுகளைக் குறிப்பிடுக. (02 × 10 = 20 புள்ளிகள்)

i.

- குறித்த காலத்தினுள் தேர்தல் நடைபெறுதல்
- முறையான தகுதியுடையோருக்கு வாக்காளராவதற்கும் வேட்பாளராவதற்குமான உரிமை காணப்படல்
- சுதந்திரமாக தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான உரிமைகள் காணப்படல்
- தேர்தல் சட்ட திட்டங்களுக்கு அமைய தேர்தல் நடத்தப்படுதல்
- சுமூகமான சூழலில் தேர்தல் நடத்தப்படுதல்
- வாக்காளருக்குத் தான் விரும்பிய அரசியல் கட்சிக்கு அல்லது குழுவுக்கு ஆதரவளிப்பதற்கும் வாக்களிப்பதற்குமான சந்தர்ப்பம் இருத்தல் அவசியம்

**(மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் இரண்டுக்கு புள்ளிகளை வழங்குக)**

ii.

- திட்டமிடல்
- தேசிய வீடமைப்பும் நிர்மானமும்
- சமூக சேவைகளும் புனர்வாழ்வும்
- விவசாயமும் கமநால சேவையும்

**(மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் இரண்டுக்கு புள்ளிகளை வழங்குக)**

iii.

- பிற சமயங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாதிருத்தல்
- பிற கலாச்சாரங்களை மதித்தல்
- முரண்பாடு ஏற்படாத விதத்தில் செயற்படல்
- ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலம் சுலபமாக வெற்றியடையலாம் என்பதைப் புரிந்து கொள்ளல்
- பிற இனத்தவர்களின் மொழிகளைக் கற்றுக் கொள்ளலும் பயன்படுத்தலும்
- சர்வ மதச் செயற்பாடுகள் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல்
- பிறரது கருத்தக்களைச் செவிமடுத்தலும் அவற்றுக்கு மதிப்பளித்தலும்
- சமத்துவத்துடன் செயற்படுதல்

**(மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் இரண்டுக்கு புள்ளிகளை வழங்குக)**

iv.

- மொத்த விற்பனை
- சில்லறை விற்பனை

**(மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் இரண்டுக்கு புள்ளிகளை வழங்குக)**

v.

- தனிநபருள்
- நபர்களுக்கிடையில்
- சமூகக் குழுக்கழுக்கிடையில்
- நாடுகளுக்கிடையில்

**(மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் இரண்டுக்கு புள்ளிகளை வழங்குக)**

vi.

- உயர்நீதிமன்றம்
- நீதவான் நீதிமன்றம்

**(மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் இரண்டுக்கு புள்ளிகளை வழங்குக)**

vii.

- பாரளுமன்றத்தில் உரைநிகழ்த்தல், செய்திகளை அனுப்புதல்
- பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல்
- பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தில் கொள்கைப் பிரகடனத்தை முன் வைத்தல்
- விடேட சட்டங்களுக்கான மசோதாக்களை பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடல்
- பொதுசன வாக்கெடுப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றை சட்டமாக்குதல்

**(மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் இரண்டுக்கு புள்ளிகளை வழங்குக)**

viii.

- உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தல்
- மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு செய்தல்
- நிர்வாகச் செயற்பாடு – பாராளுமன்ற ஆணையாளரிடம் முறைப்பாடு செய்தல் (குறைகேள் அதிகாரி/ ஒம்பூட்ஸ்மன்)
- சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறையீடு செய்தல்

**(மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் இரண்டுக்கு புள்ளிகளை வழங்குக)**

ix.

- சூழல் வெப்பநிலை உயர்வடைதல்
- பனிமழை மற்றும் பனிப் படலம் உருவாகுதல்
- சமுத்திர நீர்மட்டம் உயர்தல்
- படிவு வீழ்ச்சி செயன்முறை மாற்றமடைதல்
- மின்னல், சூறாவழி, டொனாடோ, பனிமழை போன்ற நிகழ்வுகள் ஏற்படல்
- எல்லினோ பாதிப்பு
- பருவ மழை செயன்முறையில் பாதிப்பு ஏற்படல்
- விவசாய விளைச்சல் குறைவடைதல்
- நோய்பரவுதல் அதிகரித்தல்

**(மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் இரண்டுக்கு புள்ளிகளை வழங்குக)**

x.

- சர்வதேச நட்புறவு வளர்ச்சி காணப்படும்
- புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாகுதல்
- அவசர நிலைமைகளின் போது நன்கொடை
- மற்றும் உதவி பொறப்படல்
- புதிய தொழில்நுட்ப அறிவுப் பரிமாற்றம்
- அபிவிருத்திக்கான உதவி கிடைக்கப் பெறல்
- தமது அரசினால் தனித்து பூர்த்தி செய்ய முடியாதவையை இறக்குமதி செய்தல்
- அரசியல், சமூக, கலாசாரத் துறைகளில் தொடர்புகளை விரிவுபடுத்தல்
- அரசுகளிலிருந்து கிடைக்கும் அமுத்தங்கிளலிருந்து விடுபடல்
- பாதுகாப்பு பற்றிய கொள்கைகளில் ஏற்படும் தடைகளைக் களைதல்

**(மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் இரண்டுக்கு புள்ளிகளை வழங்குக)**

**2 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- புவியில் ஏற்படும் தீங்குகளின் பாதிப்புக்களை விசாரணை செய்வார்.
- மனிதனின் நல்வாழ்விற்கு சூழலிலிருந்து கிடைக்கும் சேவைகளை பகுப்பாய்வு செய்வார்.
- காடழிப்பை விபரிப்பார்
- காடழிப்பைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளை எடுத்துரைப்பார்.

**2.** புவிக்கோளத்தின் எதிர்கால நிலைத்திருப்புக்கு புத்தாக்கங்களை அறிமுகப்படுத்துவதுடன் சூழலைப் பாதுகாப்பதும் குடிமக்களின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

(i) கற்கோளம் பாதிக்கப்படுவதால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சூழலினதும் மனிதனதும் நிலைத்திருப்புக்கு சூழலினால் வழங்கப்படும் மூன்று சேவைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) காடழிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு பிரஜை என்ற விதத்தில் நீங்கள் மேற்கொள்ளக்கூடிய இரண்டு நடவடிக்கைகளை எழுதுக. (02 புள்ளிகள்)

(*b*) மேற்குறிப்பிட்டவற்றுள் ஒன்றினை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதை விவரிக்க. (03 புள்ளிகள்)

i.

- சுற்றாடலின் இயற்கை அழகு அழிவுறல்
- மண்வளம் குன்றுதல்
- தரிசு நிலம் உருவாகுதல்
- வெள்ளப் பெருக்கு ஏற்படுதல்
- நிலம் வளமற்றுப் போதல்
- காடுகளின் மூடு படை அழிவுறல்
- நோய்களும் ஆட்கொல்லி நோய்களும் பரவுதல்
- நிக் கீழ் நீர் குறைதல்

**(இரண்டைக் குறிப்பிட்டிருப்பின் இரண்டு புள்ளிகளை வழங்குக)**

ii.

- பொருளாதார உதவிச் சேவை
- கழிவு உறுஞ்சல் சேவை
- வாழ்க்கைக்கு உதவும் சேவை

**(இவ்வாறான விடைகள் வழங்கப்பட்டிருப்பின் ஒரு விடயத்திற்கு ஒரு புள்ளி வீதம் வழங்குக)**

iii. a.

- காடழிப்பதைத் தவிர்த்தல்
- மரநடுகையை மேற்கொள்ளல்
- பிரசைகளை விழிப்பூட்டல்
- மரம் வெட்டுவோர் தொடர்பில் உரிய பகுதியினருக்கு அறிவுறுத்தல்
- மரப்பலகைக்குப் பதிலாக மாற்று வழிகளை தேடல்

**(இவ்வாறான விடைகளுக்கு ஒரு விடயத்திற்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்குக. இவ்வாறான கருத்து புலப்படும் வேறு வகையான விடயங்களை எழுதியிருப்பின் அது குறித்து கரிசனைக் கொள்க)**

b.

- மேற்கூறப்பட்டவற்றில் ஏதேனும் ஒன்றை நடைமுறைப்படுத்தும் விதம் தொடர்பில் உதாரணங்களுடன் விளக்கக.

**(ஒரு விடயத்தை விளக்கியிருப்பின் 03 புள்ளிகளை வழங்குக)**

**3 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- சமூகத்தில் ஏற்படும் மோதல் வகைகளைத் தெளிவுபடுத்துவார்.
- மோதலைத் தவிர்ப்பதற்கான மனதை திடப்படுத்திக் கொள்ளும் வழிவகைகளை ஆராய்வார்.
- மோதலை தீர்வு முறைகளை மதிப்பிடுவார்.
- மோதலைத் தீர்ப்புக் கூறலூடாகத் தீர்த்துக்கொள்ளும் முறையை விவரிப்பார்.

3. ஒருவரின் மனதை அமைதியாகவும் தெளிவாகவும் வைத்திருத்தல் மோதல் ஏற்படாதிருக்கக் காரணமாகும்.

(i) குழுக்களுக்கு இடையே ஏற்படக்கூடிய மோதல்களுக்கு இரண்டு உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்

(ii) மனதில் அமைதியை ஏற்படுத்துவதற்குப் பின்பற்றக்கூடிய மூன்று விடயங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்

(iii) (a) மோதலைத் தவிர்ப்பதற்குப் பின்பற்றக்கூடிய இரண்டு வழிமுறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்

(b) அவற்றில் ஒன்றை விளக்குக. (03 புள்ளிகள்

i.

- இன, மத, சாதி, கோத்திர என்ற அடிப்படையில்
- கருத்தியல் மோதல்
- அபிப்பிராய பேதங்களால் ஏற்படும் மோதல்

**(நபரிடம், குடும்பத்தினுள், நபர்களுக்கிடையில் மற்றும் குடும்பத்திற்கிடையில் ஏற்படும் பல்வேறு மோதல்களும் இதன்கீழ் விடைகளாக ஏற்க முடியும்)**

ii.

- சமயநடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- உளவியல் பயிற்சிகளில் ஈடுபடுதல்
- உளவளத்துணைச் சேவைகளை நாடுதல்
- இயற்கைச் சூழலை அவதானித்தல்
- உளப்பயிற்சி வழங்குதல்
- நண்பர்களுடன் உரையாடுதல்
- செல்லப் பிராணிகளை வளர்த்தல்

**(இவ்வாறான விரும்பிய மூன்று விடயங்களை எழுதியிருப்பின் ஒரு விடயத்திற்கு ஒரு புள்ளிவீதம் வழங்குக)**

iii. a.

- சனநாயக முறை
- சிறந்த தொடர்பாடல் முறையை கட்டியெழுப்புதல்
- கலந்துரையாடல்
- பேரம் பேசுதல்
- மதத்தியஸ்தம் வகித்தல்
- தீர்த்து வைத்தல்
- ஆலோசனை வழங்கல்
- நீதித் தீர்ப்பு வழங்கல்

**(இவ்வாறான பொருத்தமான விடைகள் எழுதியிருப்பின் 02 புள்ளிகள் வழங்குக)**

b.

- மேற்குறிப்பிட்ட பண்புகளில் ஒரு பண்பினை உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

**(தெளிவுபடுத்தலுக்கு 03 புள்ளிகளை வழங்குக)**

**4 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- பன்மைப் பண்பாட்டுச் சமூகம் தோற்றம் பெறுவதில் தாக்கம் செலுத்தும் காரணிகளை விவரிப்பார்.
- நல்லாட்சி என்பதனைப் பொருள் விளக்கம் செய்வார்.
- நல்லாட்சியின் பண்புகளை விசாரணை செய்வார்.
- பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் ஏற்படும் மோதல்களைக் கலந்துரையாடுவார்.
- பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் ஏற்படும் மோதலைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளைக் கடைப்பிடிப்பார்.

**4.** பல்வேறு இனங்களைச் சேர்ந்த பல்வேறுமத நம்பிக்கைகளுடைய, பல்வேறு மொழிகள் பேசுகின்ற மக்கள் ஒன்றாக வாழுதல் பன்மைப் பண்பாடு ஆகும்.

(i) இலங்கை பன்மை பண்பாட்டுச் சமூகமாக உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நல்லாட்சியில் காணக்கூடிய அடிப்படைப் பண்புகள் மூன்றினை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) பன்மை பண்பாட்டுச் சமூகமொன்றில் ஏற்படக் கூடிய இரண்டு மோதல் வகைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(*b*) பன்மை பண்பாட்டுச் சமூகமொன்றில் ஏற்படக்கூடிய மோதலைத் தவிர்ப்பதற்கு உங்களால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடு ஒன்றினைச் சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

i.

- அமைவிடம்
- குடிபெயர்வு
- ஆக்கிரமிப்பு
- பல்வேறு தேசத்தவர்கள் வருகை தரல்
- தொழிலாளர்கள் அழைத்து வரப்படல்

**(இதில் இரண்டு விடயங்களுக்கு புள்ளி வழங்குக)**

ii.

- ஊழல்களற்ற முறைகேடுகளற்ற ஆட்சியும் நிர்வாகமும்
- சுதந்திமும் சமூக நீதியும் நிலைநாட்டப்படல்
- சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளித்தல்
- நீதித் துறையில் சுதந்திரம் பாதுகாக்கப்படல்
- ஆட்சியாளர்கள் மக்களுக்குப் பொறுப்புக் கூறல்
- உரிமைகள் பாதுகாக்கப்படுதல் உறுதி செய்யப்படல்
- ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
- வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தல்
- வெளிப்படைத் தன்மையான வகையில் செயற்படல்
- அரசியல் சமுதாயப்படுத்தலுக்கு அவசியமான பின்னனியை உருவாக்கல்
- அரசியல் யாப்புச் சட்டத்தினூடாக ஆட்சி நிலவுதல்

**(இதில் மூன்று விடயங்களுக்காக 03 புள்ளிகள் வழங்குக)**

iii. a.

- இனமோதல்
- அரசியல் மோதல்
- சமய மோதல்
- சமூக பொருளாதார மோதல்

**(இவ்வாறான விடயங்கள் இரண்டை குறிப்பிட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்குக)**

b. மேற்குறிப்பிட்ட பண்புகளில் ஒரு பண்பினை உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

**(நடவடிக்கைகளை மாத்திரம் குறிப்பிட்டிருப்பின் ஒரு புள்ளி வழங்குக. தெளிவுபடுத்தியிருப்பின் மூன்று புள்ளிகளையும் வழங்குக)**

**5 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- ஜனநாயக ஆட்சி முறையில் காணப்படும் இயல்புகளை உசாவுவார்.
- அரசியல் அமைப்புக்கு அமைவாக செயற்படும் முக்கியத்துவத்தைப் பகுப்பாய்வார்.
- ஜனநாயக வாழ்க்கை முறையில் நிலவும் பண்புகளை பொருள் விளக்கம் செய்வார்.
- ஜனநாயக வாழ்க்கை முறையினால் சமூகத்திற்குக் கிடைக்கும் நன்மைகளைப் பகுப்பாய்வார்.

**5.** சனநாயக ஆட்சிமுறையை சிறந்த ஆட்சி முறையாக முழு உலகமுமே ஏற்றுக்கொண்டுள்ளது.

(i) சனநாயக ஆட்சி முறையில் காணக்கூடிய **இரண்டு** முக்கிய பண்புகள் யாவை? (02 புள்ளிகள்)

(ii) சனநாயக ஆட்சி முறை நிலவும் நாட்டில் அரசியல் யாப்புக்கமைய செயற்படுதலினால் பெறக்கூடிய **மூன்று** நன்மைகளை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) சனநாயக வாழ்க்கை முறையில் காணப்படக்கூடிய **இரண்டு** பண்புகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(*b*) இவற்றில் ஒரு பண்பினைப் பின்பற்றுவதால் சமூகத்தில் ஏற்படும் நன்மையைச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

**i.**

- சர்வஜன வாக்குரிமை மூலம் அரசாங்கமும் ஆட்சியாளர்களும் தெரிவு செய்யப்படல்
- போட்டிக் கட்சி முறை நிலவுதல்
- சுதந்திரமபனதும் நீதியானதுமான தேர்தல்
- எதிர்கடசியின் பொறுப்புக்களும் கடமைகளும்
- சுதந்திரம் சமத்துவம் மற்றும் உரிமைகள் காணப்படல்
- நாடு அரசியல் யாப்பிற்கிணங்க செயற்படுதல்
- ஊடக சுதந்திரம் நிலவுதல்
- நீதித்தறை சுதந்திரம்
- சட்டத்தின் ஆட்சி நிலவுதல் **(இவ்வாறான ஏதேனும் இரண்டுக்கு புள்ளிகளை வழங்குக)**

**ii.**

- ஆட்சியின் சீரான தன்மையும் அதன் நிலைமையும் பாதுகாத்தல்
- மனித உரிமைகள் தொடர்பாக ஆள்வோரும் ஆளப்படுவோரும் அறிந்திருத்தல்
- ஆட்சியாளர்கள் தன்னிச்சையாகச் செயற்படுவதைத் தடுத்தல்
- நீதித் துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்படுதல்
- அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படல்
- ஆட்சி நிறுவனங்களின் மூலம் மக்கள் தமது தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்தல்
- சட்டத்தின் பாதுகாப்பு சகலருக்கும் சமமாகக் கிடைத்தல்

**(இவ்வாறான ஏதேனும் மூன்று விடயங்களை எழுதியிருப்பின் 03 புள்ளி வழங்குக. மாணவர்களின் ஆக்கபூர்வமான பதில்கள் தொடர்பில் அவதானம் செலுத்துக)**

iii. a.

- ஒற்றுமையாகச் செயற்படுதல்
- பிறர் கருத்துக்களை மதித்தல்
- கலந்துரையாடல் மூலம் தீர்மாணங்களை மேற்கொள்ளல்
- சமத்துவம் பேணப்படல்
- உரிமைகளினூடாக கடமைகளை நிறைவேற்றல்

**(இவ்வாறான விடயங்கள் இரண்டினை குறிப்பிட்டிருப்பின் 02 புள்ளிகள் வழங்குக)**

b. **(விவரிப்புக்கு 03 புள்ளிகளை வழங்குக)**

**6 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- சட்டத்தின் வகைகளை விசாரணை செய்வரார்
- நாடொன்றின் சட்டத்தில் காணப்படவேண்டிய இயல்புகளை விளக்குவார்.
- தாமதமின்றியும் பக்கச்சார்பின்றியும் சட்டத்தை நிலைநாட்டவேண்டியதன் அவசியத்தைக் கலந்துரையாடுவார்.
- சட்டத்தை நிலை நாட்டும் போது ஏற்படும் தீங்குகளைக் குறைப்பதற்கு கைக் கொள்ளும் வழிவகைகளை பகுத்தாய்வார்

**6.** சட்டம் பற்றிய அறிவின்மை தகுந்த காரணமாக ஏற்றுக் கொள்ளப்படாமையினால், சகல பிரஜைகளும் சட்டம் பற்றிய தெளிவினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) தேசிய சட்டத்தின் இரண்டு வகைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சட்டத்தின் பண்புகள் மூன்றை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) தாமதமின்றியும் பக்கச்சார்பின்றியும் நீதி நிலைநாட்டப்படாதபோது ஏற்படக்கூடிய பாதகமான இரண்டு நிலைமைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(*b*) இவற்றில் ஒன்றினை குறைந்தளவினதாக்க பிரஜைகளால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாட்டினை விளக்குக. (03 புள்ளிகள்)

i.

- அரசியல் யாப்புச் சட்டம்
- குற்றவியல் சட்டம்
- குடியியல் சட்டம்

**(இதில் ஏதேனும் இரண்டு விடயங்களை எழுதியிருப்பின் இரு புள்ளிகளை வழங்குக)**

ii.

- அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு ஒன்றின் மூலம் விதிக்கப்படுதல்
- மனித நடத்தைகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விதிக்கப்படல்
- நீதியானதும் நேர்மையானதுமான தன்மை காணப்படல்
- மாறுகின்ற சமூக தேவைகளுக்கேற்ப மாறும் தன்மையுடையது

- சமூக நன்மையை நோக்காகக் கொண்டது
- விளக்கமாகவும் தெளிவாகவும் இனங்காணக் கூடியதாக இருத்தல்
- சட்டத்தை மீறுவோருக்கு தண்டணை வழங்கக் கூடியதாக இருத்தல்

**(இவ்வாறான விடயங்கள் மூன்றிற்கு மூன்று புள்ளிகள் வழங்குக. மாணவர்களின் ஆக்கபூர்வ பதில்கள் தொடர்பில் அவதானம் செலுத்துக)**

iii. a.

- தனிநபர்களுக்கிடையே நீதிமன்றத் தொகுதி மற்றும் சட்டம் பற்றிய நம்பிக்கையற்றுப் போதல்
- நீதிக்குப் பதிலாக அநீதி முன்னிலை வகித்தல்
- நாட்டிற்குள் குற்றங்களும் ஊழல்களும் பெருகுதல்
- நாட்டில் சட்டத்தின் சமநிலையும் நீதியும் சீர்குலைதல்
- நீதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் நீண்ட காலமும் சிரமமும் பாரிய செலவும் ஏற்படுதல்
- மனிதர்கள் மத்தியில் சட்டமும் நீதியும் மதிப்பிழந்து போதல்

**(இவ்வாறான இரண்டு விடயங்களை குறிப்பிட்டிருப்பின் 02 புள்ளிகளை வழங்குக)**

b. மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஒன்றை தெரிவு செய்து இப்பாதகமான நிலையினைக் குறைப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை முன்மொழிந்து, விளக்கியிருத்தல் அவசியமாகும்.

**(03 புள்ளிகள்)**

**(முன்மொழிவு மாத்திரம் இருப்பின் ஒரு புள்ளி வழங்குக. அதனை விளக்கியிருப்பின் முழுப் புள்ளிகளையும் வழங்குக)**

**7 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- உலகின் பல்வேறு பொருளாதார முறைகளைப் பகுப்பாய்வு செய்வார்.
- பொருனாதார முறையில் பயன்படுத்தப்படும் உற்பத்திக் காரணிகளைக் கலந்துரையாடுவார்.
- பிரஜைகளால் பேண்தகு அபிவிருத்தியின் பணிகளை விவரணம் செய்வார்.
- பேண்தகு அபிவிருத்திக்காக பிரஜைகள் கைக்கொள்ளவேண்டிய வழிவகைகளை பகுத்தாய்வார்.

7. உலகில் பல்வேறு வகையிலான பொருளாதார முறைகள் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமதர்மப் பொருளாதார முறையின் இரண்டு அடிப்படைப் பண்புகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) உற்பத்திக் காரணிகள் மூன்றினை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) பேண்தகு அபிவிருத்தி தொடர்பாகப் பிரஜைகளால் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் இரண்டினை எழுதுக. (02 புள்ளிகள்)

(*b*) இவற்றில் ஒரு விடயத்தைப் பின்பற்றக்கூடிய முறையினை சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

i.

- உற்பத்திக் காரணிகள் அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டிருத்தல்
- மத்திய திட்டமிடல் சபையின் மூலம் பொருளாதாரம் நிர்வகிக்கப்படுதல்
- அடிப்படைப் பொருளாதார பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் போது சமூக நன்மையைக் கருத்தில் கொண்டு செயற்படல்

**(மேற்குறிப்பிட்ட விடயங்களில் இரண்டை குறிப்பிட்டிருப்பின் இரு புள்ளிகள் வழங்குக)**

ii.

- நிலம் , உழைப்பு , மூலதனம் , முயற்சி

**(இவ்வாறான குணாம்சங்களில் மூன்று எழுதியிருப்பின் 03 புள்ளிகள் வழங்குக. இக்கருத்துடன் பொருந்தும் விடைகளுக்கும் புள்ளிகள் வழங்க முடியும்)**

iii. a.

- சூழல் நேய மனப் பாங்கை வளர்த்தல்
- அபரிமிதமான நுகர்வு
- அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல்
- எதிர்காலச் சந்ததியினருடன் தொடர்புபடுதல்
- மக்கள் பங்கு பற்றலை உறுதிப்படுத்தப்படல்
- சூழல் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு

**(இவ்வாறான பொருந்தும் விடைகள் இரண்டு குறிப்பிட்டிருப்பின் இருப்பின் 02 புள்ளிகள் வழங்குக)**

b. இதில் ஒரு பண்பு சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு பங்களிக்கும் விதத்தினை விளக்கியிருத்தல் வேண்டும்.

**(போதுமானளவில் விளக்கப்பட்டிருப்பின் மூன்று புள்ளிகளை வழங்குக)**